திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**கேள்விக்குறியாகிறது தேயிலை விவசாயிகளின் எதிர்காலம்!**

First Published : 21 Apr 2010 03:24:38 AM IST
Last Updated : 21 Apr 2010 05:23:25 AM IST

மஞ்சூர், ஏப்.20: குன்னூரில் செயல்பட்டு வந்த "இண்ட்கோ சர்வ்' கணினி ஏல மையம் முன்னறிவிப்பின்றி மூடப்பட்டதால் 30 ஆயிரம் சிறு மற்றும் குறு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். நீலகிரி தேயிலை விவசாயிகளின் எதிர்காலமே கேள்விக்குறியாகியுள்ளது.

நீலகிரி மாவட்டத்தின் பிரதான தொழிலாக இருக்கும் தேயிலை விவசாயத்தை நம்பி சுமார் 5 லட்சம் மக்கள் உள்ளனர். மாவட்டத்தில் உள்ள 14 கூட்டுறவுத் தேயிலை ஆலைகளில் 30ஆயிரம் சிறு மற்றும் குறு விவசாய உறுப்பினர்கள் பசுந்தேயிலை விநியோகம் செய்து வருகின்றனர். கூட்டுறவு ஆலைகளின் தேயிலை இண்ட்கோ சர்வ் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த 10ஆண்டுகளுக்கு முன்பு தேயிலை விலையில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டதால் விவசாயிகள் பல்வேறு போராட்டங்களை நடத்தினார்கள்.

விலை வீழ்ச்சிக்கு விவசாயிகளின் தரமற்ற தேயிலை காரணமாக கூறப்பட்டாலும், அதே தேயிலை வெளிச்சந்தையில் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்த கூடுதல் விலை இடைத்தரகர்களுக்கு போய்ச் சேருவதாக விவசாயிகள் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டது. அதை ஆராய்ந்த அப்போதைய தமிழக அரசு, தேயிலை ஏலத்தில் இடைத்தரகர்களின் தலையீட்டை தடுக்கவும், தேயிலைக்கு உரிய விலை கிடைக்கவும் முற்றிலும் கணினிமயமாக்கப்பட்ட தேயிலை ஏல மையத்தை குன்னூர் இண்ட்கோ சர்வ் மூலம் தொடங்கியது. டீ சர்வ் என்று அழைக்கப்பட்ட இந்த தேயிலை ஏல மையத்திற்கான தொழில் நுட்பத்தை டாடா கன்சல்டன்சி நிறுவனம் வழங்கியது. இதனால் கூட்டுறவு ஆலைகளின் தேயிலையை கொள்முதல் செய்யும் வியாபாரிகள் இடைத்தரகர்களை நாடாமல் நேரடியாக ஏலத்தில் கலந்து கொண்டு தேயிலை கொள்முதல் செய்தனர்.

மேலும், வெளிநாடுகளுக்கு தேயிலை ஏற்றுமதி செய்யும் ஆம்போ, கிர்னர் உள்ளிட்ட சில தேயிலை மொத்த கொள்முதல் நிறவனங்கள் தங்களுக்குத் தேவைப்படும் தேயிலையை டீ சர்வில் மட்டும் அதிகளவில் கொள்முதல் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததால் தென்னிந்தியாவின் தேயிலை உலக அளவில் தனது ஆத்திக்கத்தை செலுத்தி சர்வதேச சந்தை வாய்யப்புகளை உருவாக்கியது. இலாப நோக்கமின்றி சந்தை வாய்ப்புகளை மட்டும் மேம்படுத்தும் விதமாக டீ சர்வ் செயல்பட்டதால் தேயிலை விவசாயிகளுக்கும் கட்டுபடியாகும் விலை கிடைத்து வந்தது. கடந்த 5ஆண்டுகளில் ரூ.10க்கும் குறையாமல் அதிகப்பட்சமாக ரூ.18வரை பசுந்தேயிலைக்கு விலை கிடைத்து வந்ததே இதற்குச் சான்று.

இந்நிலையில் கடந்த மார்ச் 31ஆம் தேதி முதல் டீ சர்வ் ஏல மையம் முன்னறிவிப்பின்றி மூடப்பட்டு விட்டது. இதனால் கூட்டுறவு ஆலைகள் தங்கள் தேயிலையை விற்பனை செய்ய மீண்டும் தனியார் ஏல மையத்தை நாட வேண்டியதாயிற்று.

தனியார் ஏல மையத்தைப் பொருத்தவரையில் கொள்முதல் செய்பவர்கள் நேரடியாக பங்கேற்காமல் இடைத்தரகர்களையே நம்பி வருகின்றனர். இடைத்தரகர்கள் தங்களுக்குள் கலந்து பேசி குறைந்த விலைக்கே தேயிலையைக் கொள்முதல் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், தேயிலை மாதிரியை குறைந்தது 5கிலோ கொடுக்க வேண்டிய நிர்பந்தமும் இருப்பதால் விவசாயிகளுக்கு அதிக இழப்பு ஏற்படுகிறது. தனியார் ஏல மையத்தில் கொள்முதல் செய்பவர்கள் அதற்குண்டான தொகையை கொடுப்பதற்கு குறைந்தது 23 தினங்கள் ஆகிறது. ஆனால் தொழிற்சாலைகளுக்கு

60-70 சதவீதம் வரை பணம் கொடுத்து விட்டு அதற்கு கூட்டு வட்டியையும் வசூலிக்கும் தனியார் ஏல மையத்தினர், கொள்முதலாளர்களிடமிருந்து தங்கள் பெயருக்கு பணத்தை பெற்றுக்கொண்டு, முன்பணம் மற்றும் கூட்டு வட்டியையும் கழித்து ஆலைகளுக்கு வழங்குகின்றன. இதனால் தனியார் ஏலமையத்தில் தேயிலை விற்பனை செய்பவர்கள் சந்திக்கின்ற அவலங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இந்த இடைத்தரகர்களின் ஆதிக்கத்தைத் தகர்த்து விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க ஏற்படுத்திய டீ சர்வ் ஏல மையம், அதிகாரிகள் அலட்சியத்தால் தற்போது மூடப்பட்டு விட்டது.

அண்டை மாநிலமான கர்நாடகத்தில் விவசாயிகளின் விளை பொருள்களை விற்பனை செய்து தரும் இடைத்தரகர்கள் வியாபாரியிடம் மட்டுமே கமிஷன் பெற வேண்டும், விவசாயிக்கு உரிய விலை கிடைக்கவேண்டும் என்ற சட்டமே உள்ளது. ஆனால் நீலகிரி மாவட்டத்தில் வியாபார நோக்கத்தில் செயல்படும் தனியார் ஏல மையத்திற்கு தேயிலை விவசாயிகள் தாரை வார்க்கப்பட்டுள்ளதால் தேயிலை விவசாயிகளின் எதிர்காலமே கேள்விக்குறியாகியுள்ளது.

**கொடுவா மீன் வளர்ப்பு குறித்து கலந்தாய்வுக் கூட்டம்**

First Published : 20 Apr 2010 12:17:48 PM IST

சீர்காழி,ஏப். 19: நாகை மாவட்டம், சீர்காழி அருகே கொடுவா மீன் வளர்ப்பு குறித்த கலந்தாய்வுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

கொள்ளிடத்தில் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (ஹைதராபாத்), மத்திய உவர் நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் (சென்னை) இணைந்து இந்த கலந்தாய்வுக் கூட்டத்தை நடத்தின.

நிகழ்ச்சிக்கு சிபா இயக்குநர், முனைவர் எ.ஜி. பொன்னய்யா தலைமை வகித்தார். அண்ணாமலை பல்கலைக்கழக கடல் வாழ் உயிரியல் உயர் கல்வி மைய இயக்குநர் முனைவர் டி. பாலசுப்பிரமணியன், தமிழ் நாடு மீன்வளத் துறை இணை இயக்குநர் முனைவர் சுப்புராஜ், முனைவர் எ.ஆர். திருநாவுகரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஹைதராபாத் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய முதன்மை நிர்வாகி பி.கிருஷ்ணையா பேசியது:

விவசாயிகள் இறால் வளர்ப்பில் பெரிதும் நஷ்டத்தையே சந்தித்து வருகின்றனர். இறால் குஞ்சுகளை நோய் தாக்காமல் பார்த்து கொள்ள வேண்டும், தற்போது இறால் வளர்ப்பு தொழில் பரவலாக அழிந்து வருகிறது.

ஆனால், கொடுவா மீன் வளர்பில் குஞ்சு முதல் மீன் பெருக்கும் வரை எந்த வித வியாதியும் வராது,விவசாயிகளுக்கு மத்திய அரசு மீன் வளர்க்க 40 சதம் மானியம் வழங்குகிறது, தற்போது கொடுவா மீன் 5 டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது,வரும் 5 ஆண்டுகளில் 25 டன் உற்பத்தி இலக்காக நிர்ணயம் செய்துள்ளோம், கொடுவா மீன் கடல் நீர் மட்டும் இல்லாமல் அனைத்து வகையான நீரில் வளர கூடியது,சந்தையில் நல்ல விலை விற்கபடுகிறது.

எனவே, கொடுவா மீன் வளர்பில் விவசாயிகள் ஆர்வம் காட்ட வேண்டும் என்றார்.

இதில் உவர்நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி மாணவர்கள் ஸ்ரீநிவாசன், பிரவின்குமார், மோகன்ராஜ், சண்முகரசு, விஜயன், குப்பன் உள்ளிட்ட கலந்து கொண்டனர்.

**எள் விலை சரிவு: விவசாயிகள் கவலை**

First Published : 20 Apr 2010 12:50:56 PM IST

பல்லடம், ஏப். 19: எள் விலை சரிவால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

பல்லடம் மற்றும் சுற்றுப்புறப் பகுதியில் பி.ஏ.பி வாய்க்கால் பாசனம் மற்றும் மழையை நம்பி விவசாயம் நடைபெற்று வருகிறது. குறைந்த தண்ணீரில் நல்ல வருமானம் தரும் பயிர்களை இப்பகுதி விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர்.

எள் சாகுபடிக்கு அதிக அளவு செலவு இல்லை; இப்பயிரில் நோய் எதிர்ப்பு சக்தி இருப்பதால் பூச்சித் தாக்குதல் இல்லை. இதனால் எள் சாகுபடி செய்ய விவசாயிகள் விரும்புகின்றனர்.
பல்லடம், பொங்கலூர், சுல்தான்போட்டை பகுதியில் கருப்பு ரக எள் அதிகம் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த சில வாரங்களாக ஒரு கிலோ எள் ரூ. 50க்கு விற்றது; தற்போது ரூ. 45க்கு குறைவாக விற்பனையாகிறது. இதனால் எள் சாகு படி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.
தற்போது வெளியூர் எள் வரத்து அதிகரித்து இருப்பதால், உள்ளூர் எள் விலை சரிந்துள்ளது. வரும் வாரங்களில் பொங்க லூர், பல்லடம், சுல்தான்பேட்டை பகுதியில் பயிரிடப்பட்டுள்ள எள் அறுவடை செய்யப்பட உள்ளது.
அப்போது வெளியூர் எள் வரத்து குறைந்தால் அறுவடை எள்ளுக்கு நல்ல விலை கிடைக்கும். இல்லையெனில் தற்போதைய விலையை விட மேலும் விலை சரியும் என்பதால், எள் சாகுபடி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**நவீன விவசாயக் கருவிகளை இயக்க 100 இளைஞர்களுக்கு பயிற்சி**

First Published : 21 Apr 2010 01:32:40 AM IST

காஞ்சிபுரம், ஏப். 20: விவசாயத்துறை மூலம் விவசாய தொழில்நுட்பக் கருவிகளை இயக்குவதற்கு ஒரு மாவட்டத்துக்கு குறைந்தது 100 உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டு இது தொடர்பான அறிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று விவசாய தொழிலாளர்கள் நலவாரியத் தலைவர் கே.பி.ராமலிங்கம் தெரிவித்தார்.
÷தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நலவாரியத்தின் சார்பில் செய்யப்படும் உதவிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் சந்தோஷ் கே.மிஸ்ரா தலைமை தாங்கினார். இக் கூட்டத்தில் ஆய்வு செய்தபின் நலத்திட்ட உதவிகளை வழங்கிய விவசாய தொழிலாளர்கள் நல வாரியத் தலைவர் கே.பி.ராமலிங்கம் நிருபர்களிடம் கூறியது:
÷விவசாய தொழிலாளர் நல வாரியத்தில் சென்னையை தவிர்த்து மற்ற இடங்களில் 75,73,643 குடும்பங்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு, 1,73,00,761 பேர் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். இத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் இதுநாள் வரை 5,10,504 பயனாளிகளுக்கு ரூ.415 கோடிக்கு உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.
÷காஞ்சிபுரம் மாவட்டத்தில் 6,516 பயனாளிகளுக்கு ரூ.6.17 கோடிக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் நடைபெற்ற நிதி கூட்டத் தொடரில் 2010-11 நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் இத் திட்டத்தின் செயல்பாட்டுக்காக ரூ.152 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
÷இன மலைத் தோட்டத்தில் பயிர் செய்யும் விவசாயிகளையும் இத் திட்டத்தில் சேர்க்க உள்ளோம். பதிவினை புதுப்பிக்கும் காலம் மூன்று ஆண்டு காலக்கெடுவினை 5 ஆண்டு காலமாக நீட்டிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
÷பயிற்சி அளிக்கப்படும் விவசாய தொழிலாளர்களுக்கு ஒரு ஊக்கத் தொகையை வாரியத்தின் நிதியிலிருந்து வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2,34,903 குடும்ப அடையாள அட்டைகள் இத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு 4,36,475 உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் விடுபட்ட அனைத்து தகுதியுள்ள உறுப்பினர்கள் இத் திட்டத்தின் கீழ் சேர்க்க சிறப்பு முகாம்களை நடத்த வேண்டும்.
÷நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுத்து விரைவில் நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரிடம் வலியுறுத்தியுள்ளோம் என்றார்.
÷இந்த ஆய்வுக் கூட்டத்தில் விவசாய தொழிலாளர் நல வாரிய இணைத் தலைவர் கு.செல்லமுத்து, மாவட்ட வருவாய் அலுவலர் சிவாராசு உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தினமலர்

**பஞ்சு விலை உயர்வுக்கு மத்திய அரசின் தவறான முடிவே காரணம்: நூற்பாலை சங்கம் புகார்**

அன்னூர்,: 'பஞ்சு விலை அபரிமிதமாக அதிகரித்ததற்கு மத்திய அரசின் தவறான முடிவுகளே காரணம்' என, இந்திய நூற்பாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இச்சங்கத்தின் தலைவர் சின்னையன் அறிக்கை: கடந்த இரண்டாண்டுகளாக கடும் நெருக்கடியில் சிக்கி தவித்த பஞ்சு நூற்பாலைகள், மூன்று மாதமாக சற்று ஆதாயம் பெறுவதால் நிம்மதியாக தொழில் நடக்கிறது. அதே நேரத்தில் துணி உற்பத்தியாளர்கள், திருப்பூர் ஆயத்த ஆடை ஏற்றுமதியாளர்கள் ஆகியோர், 'நூற்பாலைகள் நூல் விலையை உயர்த்தி விட்டன' என்று கூறுகின்றனர். 'நூல் விலை உயர்வே தங்கள் தொழில் நெருக்கடிக்கு காரணம்' என்று தெரிவிக்கின்றனர்.

பஞ்சு விலை கடந்த ஆண்டை விட 40 சதவீதம் உயர்ந்துள்ளது. இதற்கு மத்திய அரசின் தவறான முடிவுகளே காரணம். கடந்த ஆண்டு மத்திய அரசு, பருத்தி கொள்முதல் ஆதார விலையை எந்த முன் அறிவிப்பும் இல்லாமல் 40 சதவீதம் உயர்த்தியது. இதனால் விவசாயிகள் பயனடைந்தனர். உள்நாட்டுத் தேவையை கருத்தில் கொள்ளாமல், ஊக்கத்தொகை கொடுத்து பஞ்சு ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதி அளித்தது. இதனால் தரகர்களும், ஆன்லைன் வர்த்தகர்களும் மட்டுமே பயனடைந்தனர்.

மின்வெட்டு 55 சதவீதம் வரை உள்ளது. ஜெனரேட்டர் பயன்படுத்தும்போது மூன்றரை மடங்கு அதிக செலவு ஏற்படுகிறது. ஆட்கள் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. நூற்பாலை தொழிலுக்கு அதிக தொழிலாளர் தேவை. வடமாநிலங்களிலிருந்து மொழி தெரியாத, தொழில் தெரியாதவர்களை அழைத்து வந்து வேலைக்கு அமர்த்த வேண்டி உள்ளது. பயிற்சியில் உள்ளவர்களுக்கே தினமும் 200 ரூபாய் சம்பளம் தர வேண்டி உள்ளது. கோவை மற்றும் மதுரையில் மத்திய அரசு திறந்துள்ள பஞ்சு குடோன்களில் மத்திய விற்பனை வரியில் பஞ்சு வாங்குவதால் அதை 'வாட்' வரியில் சரி செய்து கொள்ள முடியாது. 'செஸ்' வரி ஒரு சதவீதம் கட்ட வேண்டி உள்ளது. லாரி வாடகை, ஏற்றுக்கூலி, இறக்குக்கூலி அதிகரித்து விட்டன. இதனால் நூல் விலையுயர்வு தவிர்க்க முடியாதது. பஞ்சு விலையை விற்பவர்கள் தான் நிர்ணயிக்கின்றனர். இந்தியாவிலிருந்து பஞ்சு கொள்முதல் செய்து துணி ஏற்றுமதி செய்யும் சீனாவுடன், திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் போட்டி போட முடியவில்லை என்பது வியப்பாக உள்ளது. ரூபாய்க்கு எதிரான டாலர் மதிப்பு வீழ்ச்சியால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். தங்கள் குறைபாடுகளை ஆராய்ந்து நிவாரணம் பெறுவது தான் சரியானது. நூல் விலையை மட்டும் குறை கூறிக்கொண்டு இருந்தால் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடும். மின் வெட்டு, ஆள் பற்றாக்குறை ஆகிய காரணங்களால் நூல் உற்பத்தி 60 முதல் 70 சதவீதம் பாதிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு பனியன் உற்பத்தியாளர்கள் 10 சதவீதம் விலை உயர்த்தியுள்ளனர். விசைத்தறி துணியும் விலை உயர்ந்துள்ளது. பஞ்சு விலை அதிகரிப்பு, மின் தடை, தொழிலாளர் பற்றாக்குறை ஆகிய காரணங்களால் ஏற்பட்டுள்ள பொது நெருக்கடியை தீர்க்க நூல் உற்பத்தியாளர்கள், உள்நாட்டு பனியன் உற்பத்தியாளர்கள், ஆயத்த ஆடை ஏற்றுமதியாளர்கள் ஆகிய அனைவரும் ஒன்றாக கூடி முடிவு எடுப்பது தான் சரியான தீர்வாக அமையும். இவ்வாறு, அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**கரும்பு உற்பத்தி பெருக்க விவசாயிகள் பயிற்சி முகாம்**

சேத்தியாத்தோப்பு: அகர ஆலம்பாடியில் கரும்பு உற்பத்தி பெருக்க விவசாயிகள் பயிற்சி முகாம் நடந்தது.

நபார்டு வங்கி துணை பொது மேலாளர் ராஜகோபாலன் தலைமை தாங்கினார். புவனகிரி வேளாண் உதவி இயக்குநர் கனகசபை முன்னிலை வகித் தார். உழவர் மன்ற தலைவர் வேல்முருகன் வரவேற் றார். சேத்தியாத்தோப்பு எம்.ஆர்.கே., கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆட்சியர் ஆசியா மரியம் பயிற்சி முகாமை துவக்கி வைத்தார். முகாமில் கடலூர் வேளாண் இணை இயக்குநர் அலுவலர் சந்திரசேகரன், முன்னாள் தலைமை கரும்பு அலுவலர் (பொறுப்பு) ராஜதுரை, கரும்பு அலுவலர்கள் முருகேசன், வெங்கடேசன், கரும்பு அபிவிருத்தி அலுவலர் ராஜன், புவனகிரி வேளாண்மை அலுவலர் ராஜன் ஆகியோர் கரும்பு உற்பத்தி பெருக்கம், சர்க் கரை கட்டுமான உயர்வுக் கான வழி முறைகள், கரும்பு நடவு முறைகள், சொட்டு நீர் பாசனம் குறித்து பேசினர். உதவி வேளாண் அலுவலர் கவிதா, கரும்பு உதவியாளர்கள் ராமலிங்கம், தமிழ்மணி, உழவர் மன்ற கூட்டமைப்பு தலைவர் வெங்கடேசன், ராமலிங் கம், குஞ்சிதபாதம், ஊராட்சி தலைவர் சங்கர், உட்பட பலர் பங்கேற்றனர்.

**மஞ்சள் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்**

தர்மபுரி: தர்மபுரி மாவட்ட விவசாயிகள் மஞ்சள் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். தர்மபுரி மாவட்டத்தில் பாப்பிரெட்டிப்பட்டி, பென்னாகரம், நல்லம்பள்ளி உள்ளிட்ட சுற்று வட்டார பகுதிகளில் விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்து வருகின்றனர். கடந்த ஆண்டு மஞ்சள், ஒரு குவிண்டால் ஆயிரத்து 200 ரூபாய் முதல் 4 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையானதால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது. தற்போது ஒரு குவிண்டால் 12 ஆயிரத்து 500 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது. ஒரு ஆண்டில் மஞ்சள் விலை பல மடங்கு உயர்ந்துள்ளதால், தர்மபுரி மாவட்ட விவசாயிகள் மஞ்சள் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இரு ஆண்டுகளுக்கு முன் ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையான மஞ்சள், தற்போது 3 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிறது. விவசாயிகள் மஞ்சள் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருவதால், நடப்பாண்டு சாகுபடி பரப்பு அதிகமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கண்மாய் மீன்களை காப்பாற்ற முயற்சி: கழிவுநீரை கொண்டு செல்லும் விவசாயிகள்**

மதுரை:சிலைமான் அருகே கொந்தகை கண்மாயில் தண்ணீர் இன்றி தவிக்கும் மீன்களை காப்பாற்ற, விவசாயிகள் விரகனூர் அணைப்பகுதியில் இருந்து கழிவுநீரை கால்வாய் வழி கொண்டு செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.விரகனூர் மதகு அணையிலிருந்து, 46 கி.மீ., தூரத்திற்கு கால்வாய்கள் உள்ளன. இதன் மூலம் 72 கண்மாய்களும், 27 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. தற்போது கடுமையான வறட்சி நிலவுவதால், அணையில் தண்ணீர் இல்லை. ஆனால் மதுரை நகர் பகுதியில் இருந்து வரும் கழிவுநீர், பச்சை நிறத்தில் விரகனூர் அணையில் தேங்கியுள்ளது.

சிலைமான் அருகே உள்ள கொந்தகை கண்மாய், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள முக்கிய கண்மாய். 2,700 ஏக்கர் பரப்பளவு உள்ள இந்த கண்மாயில் மீன் வளர்ப்பதுடன், சுற்றிலும் உள்ள 18 ஊர்களும் பாசனம் பெறுகிறது. தற்போது பாசனத்திற்கு தேவையான அளவு தண்ணீர் இதில் இல்லை. நான்கு மாதங்களுக்கு முன் இந்த கண்மாயில் 6 லட்சம் மீன் குஞ்சுகள் (கட்லா, ரோகு, விரால், சில்வர், மிர்கால்) விடப்பட்டன. இவை தற்போது 400 - 700 கிராம் வரை வளர்ந்துள்ளன. தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் இந்த மீன்கள் தினமும் செத்து வருகின்றன.மீன் குத்தகைதார்கள், இந்த மீன்களை காப்பாற்றும் கடைசி கட்ட முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். விரகனூர் அணையில் தேங்கியுள்ள கழிவுநீரை 8 கி.மீ., தூரம் உள்ள கொந்தகை கண்மாய்க்கு துணைக் கால்வாய் மூலம் கொண்டு செல்லும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

விவசாயி அடைக்கண் (62) கூறியதாவது: இதை விட கடுமையான வறட்சியை நாங்கள் சந்தித்துள்ளோம். தற்போது மீன்கள் செத்து மிதப்பது வேதனையாக உள்ளது. இதனால் கழிவு நீராக இருந்தாலும் இதனை கால்வாய் மூலம் கொண்டு சென்று மீன்களை காப்பாற்ற முடியுமா என முயற்சிக்கிறோம். 8 கி.மீ., தூரம் தண்ணீரை கொண்டு செல்லும் போது, சில இடங்களில் இந்த தண்ணீரை விவசாயத்திற்கும் எடுக்கின்றனர். 'புல்லுக்கும் பாயும், நெல்லுக்கும் பாயும்' பழமொழிக்கு ஏற்ப முயற்சிக்கிறோம். கூடவே மழையும் தொடர்ந்து பெய்தால் தான் எங்களது முயற்சி பயனளிக்கும், என்றார்.ஆனால் கழிவுநீரில் வளரும் மீன்களை உண்ணும் பொதுமக்களின் கதி?

**கொசு ஒழிப்புக்கு கப்பி மீன் சப்ளை**

மதுரை:மதுரையில் நான்கு மண்டலங்களிலும், கொசுக்களை ஒழிப்பதற்கு மாநகராட்சி தொடர் நடவடிக்கை எடுத்துள்ளது.கழிவு நீர் வாய்காலில் கப்பி மீன்கள் விடப்படுகிறது. இவை கொசுப்புழுவை உணவாக உட்கொள்கிறது. ஆகஸ்ட் முதல் தண்ணீர் தொட்டி உள்ள வீடுகளுக்கு, இந்த கப்பி மீன் சப்ளை செய்யப் பட உள்ளது. சுகாதார ஆய்வாளர் சுப்பிரமணியன் கூறுகையில், "நான்கு மண்டலங்களிலும் கொசு ஒழிப்பு பணியில் 40 ஊழியர்கள் மட்டும் உள்ளனர். ஒவ்வொரு மண்டலங்களிலும் கூடுதலாக தலா 25 ஊழியர்கள் நியமனம் செய்யப் பட்டால் மழைக்காலங்களிலும் கொசு இல்லாத மதுரையை உருவாக்க முடியும்," என்றார்.

**நாளை விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்**

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை (22ம்தேதி) காலை 11 மணிக்கு பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறுகிறது. இதில் வேளாண் சம்பந்தமாக நீர்ப்பாசனம், கடன்உதவிகள், இடுபொருட்கள், இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றி முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படுகிறது. எனவே விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் குறைகளை தெரிவிக்கலாம் என மாவட்ட கலெக்டர் விஜயகுமார் தெரிவித்துள்ளார்.அரியலூரில் 23ம் தேதி அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 23ம் தேதி அரியலூர் தாலுகா அலுவலக கூட்டரங்கில் காலை 11 மணிக்கு கலெக்டர் தலைமையில் நடைபெறும்.இக்கூட்டத்தில் விவசாயிகள் கலந்துகொண்டு வேளாண் சம்பந்தமான, நீர்ப்பாசனம், வேளாண் கடன் உதவிகள், இடுபொருட்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான முறையீடுகளை தெரிவிக்கலாம் என கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

பெரம்பலூர்: 'பெரம்பலூர் கலெக்டர் விஜயகுமார் வெளியிட்ட அறிக்கை: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை காலை 11 மணிக்கு நடக்கிறது.
விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளின் முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும். எனவே இக்கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு குறைகளை தெரிவித்து பயன்பெறலாம். கூட்டத்தில் அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டு விவசாயிகளின் கோரிக்கை மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க உள்ளனர். எனவே பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில் பங்கேற்று பயன்பெறலாம். இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி ஊழியர் சங்க செயற்குழு கூட்டம்**

புதுக்கோட்டை: புதுக்கோட்டையில் தமிழ்நாடு தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழுக் கூட்டம் நடந்தது. தலைவர் ராமதுரை தலைமை வகித்தார். பொதுச்செயலாளர் ஜினசந்திரன், பொருளாளர் வைரப்பன், அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் பாலகிருஷ்ணன், துணைத் தலைவர் முனுசாமி, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி ஊழியர் சங்க பொதுச்செயலாளர் ஜெயக்குமார், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சங்க பொதுச்செயலாளர் மதியழகன் உட்பட சங்க நிர்வாகிகள் மற்றும் கூட்டுறவு வங்கி ஊழியர்கள் பலர் பங்கேற்றனர். தமிழ்நாடு தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி ஊழியர்களின் ஊதிய உயர்வு குறித்த கோரிக்கை மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். பணி ஓய்வுபெறும் ஊழியருக்கான பண பலன் மற்றும் சலுகை காலதாமதமின்றி வழங்கவேண்டும். பணிவரன் முறையின்றி பணியாற்றி வரும் ஊழியர்களை பணிவரன் முறைப்படுத்த வேண்டும். காலிப்பணியிடங்களை நிரப்பவேண்டும். தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளை தமிழ்நாடு மாநில வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் கிளைகளாக மாற்ற வேண்டும். கூட்டுறவு வங்கிகளின் நிதி அதாரத்தை அதிகரிக்க வேண்டும். வைத்தியநாதன் குழு பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டும் உட்பட தமிழக அரசை வலியுறுத்தி பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**23ல் விவசாயிகள்குறைதீர் கூட்டம்**

புதுக்கோட்டை: புதுகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 23ம் தேதி நடக்க உள்ளது.இது குறித்து கலெக்டர் சுகந்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:புதுகை கலெக்டர் அலுவலகத்தில் வரும் 23ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடக்க உள்ளது. இதில் பல்துறை அரசு அதிகாரிகள் கலந்து கொள்ள உள்ளதால் விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்துகொண்டு தங்கள் குறைகளை தெரிவித்து பயன்பெறலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**வறட்சி! தக்காளி விளைச்சல் பாதிப்பு விலையும் கிடு...கிடு உயர்வு**

சேலம்: சேலம் மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சி காரணமாக, தக்காளி பயிர்கள் கருகி விட்டதால் விளைச்சலில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரும் பழத்தின் வரத்து பாதியாக குறைந்துள்ளதால் விலை திடீர் உயர்வு ஏற்பட்டுள்ளது. ஏழைகளின் ஆப்பிள் என்றழைக்கப்படும் தக்காளி பழத்தின் விலையில் ஏற்பட்டுள்ள உயர்வு பெண்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

சேலம் மாநகருக்கு தக்காளி பழங்கள் தம்மம்பட்டி, மல்லூர், வாழப்பாடி, அயோத்தியா பட்டணம், தாரமங்கலம், இளம்பிள்ளை, அரியானூர் ஆகிய இடங்களில் இருந்து விற்பனைக்கு வருவது வழக்கம். ஆனால், இப்பகுதியில் ஏற்பட்ட விளைச்சல் குறைவால் சில மாதங்களாக தக்காளி வரத்து மிகவும் குறைந்து இருந்தது. சேலத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டு தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு, ராயக்கோட்டை, அரூர் மற்றும் கிராமப் பகுதிகளில் தற்போது தக்காளி விளைச்சல் எதிர் பார்த்த அளவு இல்லை.

இப்பகுதியில் இருந்து சேலத்திற்கு நாள் ஒன்றுக்கு ஐந்து லோடு தக்காளி விற்பனைக்கு வந்து கொண்டு இருந்தது. தற்போது வரத்து குறைந்து ஒரு லோடு மட்டும் விற்பனைக்கு வருகிறது. சேலம், தர்மபுரி மாவட்டங்களில் தக்காளி விளைச்சலில் ஏற்பட்ட சரிவால், சேலத்தில் நாடு மற்றும் கிராஸ், பெங்களூர் ரக தக்காளிக்கு மவுசு அதிகரித்தது. இரண்டு வாரத்துக்கு முன்னர் பழங்கள் அனைத்தும் 10 ரூபாய்க்கு குறைவாக விற்கப்பட்டு வந்தது. சேலத்தில் சில தினங்களுக்கு முன் நாட்டுத் தக்காளி கிலோ எட்டு ரூபாய்க்கு விற்று வந்தது, நேற்று கிலோ 15 ரூபாய்க்கு உழவர்சந்தையிலும், வெளி மார்க்கெட்டில் 20 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.

கடந்த 20 நாளுக்கு முன் 120 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை விற்ற, 15 கிலோ கொண்ட பெட்டி ஒன்று தற் பாது 225 ரூபாய் முதல் 300 ரூபாய் வரை விற்கிறது. கிலோ 10 ரூபாய்க்கு விற்று வந்த கிராஸ் ரக தக்காளி கிலோ 14 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதே போன்று சென்ற வாரம் வரை 12ரூபாய்க்கு விற்று வந்த பெங்களூர் தக்காளி, நாடு மற்றும் கிராஸ் ரக தக்காளி பழங்களின் வரத்து குறைவு காரணமாக தற்போது பெங்களூர் தக்காளி பழம் கிலோ 15 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது.

இது குறித்து பனமரத்துப்பட்டியை சேர்ந்த விவசாயி தங்கவேல் கூறியதாவது: சேலம் மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சியின் காரணமாக ஏரிகள் மற்றும் கிணறுகளில் கடும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அத்துடன் மின்சார தடை காரணமாக மோட்டார்களை இயக்கி பயிர்களுக்கு தேவையான தண்ணீரை பாய்ச்ச இயலவில்லை. இதன் காரணமாக தக்காளி பயிர்கள் மட்டுமின்றி பிற பணப் பயிர்களும் தண்ணீர் கிடைக்காமல் கருகி வருகிறது.

இன்னும் ஒரு மாதத்துக்கு இந்நிலை தொடரும் பட்சத்தில் அனைத்து விவசாய காய்கறிகளின் வரத்திலும் சரிவு ஏற்பட்டு, விலையில் கடும் உயர்வு ஏற்படும். இவ்வாறு அவர் கூறினார்.

சூப் விற்பனை நிறுத்தம்:தக்காளி விலையில் ஏற்பட்டுள்ள கடும் உயர்வை தொடர்ந்து, சேலத்தில் பிரசித்தி பெற்ற ஹோட்டல்கள், மாலை நேர சூப் கடைகளில் தக்காளி பழ சூப் விற்பனை முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது. நட்சத்திர அந்தஸ்து பெற்ற ஹோட்டல்களில் மட்டும் தக்காளி சூப்பின் விலை அதிகரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**விவசாயிகளுக்கான டீஸல் மானியம் வழங்க கோரிக்கை**

கும்பகோணம்: 'விவசாயிகளுக்கு டீஸலுக்கான மானியத்தை உடன் வழங்க வேண்டும்' என காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் தஞ்சை மாவட்ட செயலாளர் சுவாமிமலை சுந்தரவிமலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.இதுபற்றி, அவர் தமிழக முதல்வர், கூட்டுறவுத்துறை செயலாளருக்கும் அனுப்பிய மனு விபரமாவது: கடந்த ஆண்டு குறுவை சாகுபடி பருவத்தின் போது 2009 ஜூலை 15 முதல் செப்டம்பர் 30ம் தேதி வரை ஆயில் இன்ஜினை கொண்டு குறுவை சாகுபடியை தடையில்லாமல் செய்த விவசாயிகளின் உணவு உற்பத்தி திட்டத்தை ஊக்குவிப்பதற்காக தமிழக அரசு வேளாண் பொறியியல் துறை சார்பில் டீசலுக்கு மானியம் அளிக்கும் திட்டத்தை அறிவித்தது.

அதன்படி விவசாயிகளை விண்ணப்பிக்க அழைப்பு விடுத்ததின் பேரில் விவசாயிகள் உரிய டீசல் வாங்கிய ரசீதுகளுடன் முறையாக விண்ணப்பம் அளித்தனர். அவ்வாறு விண்ணப்பம் அளித்த தகுதியுள்ள விவசாயிகளுக்கு உரிய மானியம் கிடைப்பதில் நீண்ட தாமதம் ஆகிறது என்பதை கலெக்டர் மற்றும் ஆர்.டி.ஓ.,க்கள் நடத்திய விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். அதன்படி தமிழக அரசு அதற்குரிய நிதியை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒதுக்கீடு செய்திருப்பதற்காக விவசாயிகள் சார்பில் நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட தொடர்புடைய தகுதியுள்ள விவசாயிகளுடைய பெயர் பட்டியல் அந்தந்த பகுதி அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு கடந்த மார்ச் மாதமே அனுப்பப்பட்டிருந்தும், இதுவரை அந்த கூட்டுறவு சங்கங்களுக்கு உரிய நிதி கிடைக்காத காரணத்தால் விவசாயிகள் வீணாக அலைகழிக்கப்படுகின்றனர். எனவே, தகுதியுள்ள விவசாயிகளுக்கு உரிய நிதியினை உடன் காலதாமதம் இன்றி அந்தந்த கூட்டுறவு வங்கிகள் மூலம் கிடைக்க நடவடிக்கை எடுக்கவும், பணம் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதற்கு முன்பாக முறையாக முன்அறிவிப்பு செய்து முறைகேடு இன்றி வழங்க வேண்டும், என மனுவில் தெரிவித்துள்ளார்.

---

**கூட்டுறவு விற்பனை சங்கங்கள் 62 டன் உளுந்து கொள்முதல்**

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலம் 2009 -10ம் ஆண்டில் 62 டன் உளுந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நடப்பு 2010 - 11ம் ஆண்டில் விவசாயிகளிடம் இருந்து அதிக அளவில் உளுந்து கொள்முதல் செய்ய வேண்டும் என்று விற்பனை சங்கங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி இதுவரை 40 டன் உளுந்து, குவிண்டால் ஒன்றுக்கு நான்காயிரத்து 700 முதல் நான்காயிரத்து 850 ரூபாய் வரை சந்தை நிலவரத்துக்கு ஏற்ப உளுந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் உளுந்து பயிர் செய்துள்ள விவசாயிகள் தங்களது உளுந்து மகசூலை அருகில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களை தொடர்பு கொண்டு விற்பனை செய்து பயன்பெறலாம். கூடுதல் விபரங்கள் அறிய தஞ்சை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம் 04362 257364, கும்பகோணம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம் 0435 2430808, பாபநாசம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம் 04374 223791, பட்டுக்கோட்டை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம் 04373 235045, ஒரத்தநாடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம் 04372 233231 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் என கலெக்டர் சண்முகம் தெரிவித்தார்.

**மாங்காய் பழுக்க புதிய ரசாயனம்: விவசாயத்துறை பரிந்துரை**

ராஜபாளையம்:மாங்காய்களை பழுக்க வைக்க 'எதிலின்' என்ற ரசாயனத்தை பயன்படுத்தும் போது சிறந்த பலன் கிடைப்பதாக விவசாயத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

மாம்பழ சீசன் இந்தாண்டு தாமதமாக துவங்கியுள்ளது. சப்பட்டை, பஞ்சவர்ணம் உட்பட பல ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. நடப்பாண்டில் தாமதமாக பூ பூத்ததாலும், காய் பிஞ்சு பருவத்தில் பலத்தக்காற்று வீசியதாலும் உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது. குறைவான விளைச்சலே உள்ளதால், மார்க்கெட்டில் மாம்பழங்களின் விலை அதிகமாக உள்ளது. கிலோ 25லிருந்து 35 ரூபாய் வரை உள்ளதால், மாங்காய்கள் பழுக்கும் பருவத்திற்கு வரும் முன்பே பறிக்கப்படுகிறது. அவற்றை வியாபாரிகள் செயற்கையாக பழுக்க வைத்து விற்பனை செய்து வருகின்றனர்.மாங்காய்களை பழுக்க வைக்க 'கால்சியம் கார்பைடு' என்ற ரசாயன கற்கள் பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் பழுக்கும் பழங்கள், பார்ப்பதற்கு அழகாக மஞ்சள் நிறத்தில் உள்ள போதிலும், சுவை குறைவாக இருக்கும். மேலும், அதை சாப்பிடுபவர்களுக்கு உடல் வெப்பத்தை அதிகரித்து வயிற்றுவலியை ஏற்படுத்திவிடும். பக்க விளைவுகள் ஏற்படுத்தும், 'கால்சியம் கார்பைடை' பயன்படுத்த சுகாதாரத்துறை தடை விதித்துள்ளது. மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**புதிய ரசாயனம்:** இந்நிலையில், காய்களை பழுக்க வைக்க உடல் பாதிப்புகளை ஏற்படுத்தாத 'எதிலின்' என்ற புதிய ரசாயனம் ஒன்றை விவசாயத்துறை சார்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மாங்காய்கள் இயற்கையாக பழுக்கும் போது கிடைக்கும் சுவை, தரம் இதில் இருக்கும். இதன் மூலம் மாங்காய்களை பழுக்க வைப்பது எளிது. மூடிய அறையில் முழுமையாக வளர்ந்த மாங்காய்களை குவித்து வைத்து, அங்கு ஒரு பாத்திரத்தில் 'எதிலின்' திரவத்தை ஊற்றி வைக்க வேண்டும். அந்த திரவம் ஆவியாகி, காய்கள் மீது படிந்து அவற்றை பழுக்க வைக்கும். இம்முறையில் 24 மணி நேரத்தில் காய்கள் பழுத்துவிடும். தற்போது மதுரையில் உள்ள உரக்கடைகளில் 'எதிலின்' ரசாயனம் விற்பனை செய்யப்படுகிறது. மக்களின் உடல் நிலையை பாதிக்கும் 'கால்சியம் கார்பைடு'க்கு பதிலாக 'எதிலினை' பயன்படுத்த மாம்பழ வியாபாரிகள் முன்வர வேண்டும்.

**தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்**

விருதுநகர்: சிவகாசி வடபட்டியில் தனியார் அட்டை மில் அனமதியை ரத்து செய்யக் கோரி தமிழக விவசாயிகள் சங்கத்தினர் கலெக்டர் அலுவலகம் முன்பு  கண்டன ஆர்ப்பாட்டம் செய்தனர். மாவட்டசெயலாளர் விஜய முருகன், தலைவர் குருசாமி, பொருளாளர் நேரு, மாநில தலைவர் பாலகிருஷ்ணன், விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் முத்துக்குமார், செயலாளர் அர்ச்சுனன் உட் பட பலர் கலந்து கொண்டு பேசினர். அட்டை மில்லுக்கு அரசு வழங்கிய அனுமதியை ரத்து செய்யக்கோரி கலெக்டரிடம் மனு கொடுத்தனர்.

**மல்பெரியில் மாவுப்பூச்சி; கவலையில் விவசாயிகள்**

பொங்கலூர்: மல்பெரி செடியை மாவுப்பூச்சி தாக்கியுள்ளதால், பட்டு விவசாயி களின் எதிர்காலம் கேள்விக் குறியாகி உள்ளது. பொங்கலூர் சுற்றுவட்டார பகுதிகளில் 354 ஏக்கரில் மல்பெரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பல்லடம் பகுதியைச் சேர்ந்த 208 விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப் பில் ஈடுபட்டுள்ளனர். பட்டு வளர்ச்சி துறை சார்பில், நாற்று நடவு, சொட்டு நீர் பாசனம் அமைத்தல் போன்றவற்றுக்கு, ஏக்கருக்கு 22 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது.

பட்டு புழு வளர்ப்பு சாதனங்கள் வாங்க, 30 ஆயிரம் ரூபாய், பட்டு உற்பத்தி கூடம் அமைக்க 50 ஆயி ரம் ரூபாய் மானியம் கொடுக்கப் படுகிறது. இப்பகுதி யில் பட்டு வளர்ப்பு தொழில் வளர்ச்சி பெற மானியமும் ஒரு காரணம். முதல் ஆண்டில், ஏக்கருக்கு 800 கிலோ மகசூல் கிடைக்கிறது. இரண்டாவது ஆண்டில் 1,000 கிலோ வரையும், மூன்றாம் ஆண்டில் இருந்து 1,300 கிலோ வரை மகசூல் கிடைக்கிறது. ஒரு ஏக்கரில் பட்டுப்புழு வளர்க்கும் விவசாயிக்கு மாதம் 10 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைத்து வந்தது. இப்பகுதியில் மொத்தம் மூன்று லட்சத்து 50 ஆயிரம் கிலோ ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு ஏழு கோடி ரூபாய்க்கு வர்த்தகம் நடந்து வருகிறது. இப் பகுதியில் உள்ள ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை அளித்து வருகிறது. இதன் மூலம் விவசாயிகளின் பொருளாதார நிலை மேம்பட்டுள்ளது.

தற்போது, மாவுப்பூச்சி வடிவில் இதற்கும் சோதனை வந்து விட்டது. முதலில், இப்பகுதியில் இருந்த ஆயிரக்கணக்கான பப்பாளி மரங் களை அழித்தொழித்த மாவுப் பூச்சி, அடுத்து மல்பெரியையும் விட்டு வைக்காமல், தன் கோரத் தாக்குதலை தீவிரப்படுத்தியுள் ளது. இதனால், பட்டு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் வயிற்றில் புளியைக் கரைத்துள்து. சில ஆண்டுகளாக பட்டுகூடு விலையில் சரிவு ஏற்பட்டது. தற் போது தான் கட்டுப்படியான விலை கிடைத்து வருகிறது. மஞ்சள் பட்டு கூடு கிலோ 160 ரூபாய் முதல் 190 ரூபாய் வரையும், வெண்பட்டு கூடு 210 ரூபாய் முதல் 245 ரூபாய் வரையும் விலை போகிறது. விலை உயர்ந்து வரும் இச்சமயத்தில், மாவுப்பூச்சியால், பட்டுப்புழு வளர்ப்பு பாதிக்கப் பட்டு, உற்பத்தி முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப் படுத்த, இலைகளை பறித்து கவாத்து செய்ததும் .03 சதம் ரோகார் மருந்தை செடியின் வேர் பகுதியில் தெளிக்குமாறு வேளாண் துறையினர் சிபாரிசு செய்கின்றனர். மருந்து தெளித்த 15 நாட்களுக்கு பூச்சிகள் வருவதில்லை. அதன் பின், வேறிடங்களில் இருந்து வந்து செடியின் நுனிப்பகுதியில் ஒட்டிக்கொள்கிறது.

இவை, தாக்கிய செடியின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப் படுகிறது. செடி வளர்ந்த பின் மருந்து தெளித்தால், இலையில் உள்ள விஷம் பட்டு புழுவை பாதிக்கும் என்பதால், மருந்து தெளிப்பதில் சிக்கல் ஏற்படுகிறது. சில விவசாயிகள் பூச்சி தாக்கிய செடியின் நுனிப்பகுதியை ஒடித்து, தீயிலிட்டு பொசுக்குகின்றனர். சில விவசாயிகள், மாவுப்பூச்சி பாதித்த செடியை முழுவதுமாக வெட்டி எரித்து விடுகின்றனர். சிலர், வேறு ஏதாவது தீர்வு கிடைக்காதா என்ற ஏக்கத்தில் உள்ளனர். காற்றாலை கம்பெனி களுக்கும், 'ரியல் எஸ்டேட்' நிறு வனங்களுக்கும் நிலத்தை விற்று விட்டு, வேறு தொழிலுக்கு மாறி விடலாமா என யோசித்து வரு கின்றனர் ஒரு சில விவசாயிகள். மாவுப்பூச்சி பிரச்னைக்கு தீர்வு காண, திண்டுக்கல் பகுதியைச் சேர்ந்த கவிக்குயில் மகளிர் குழு வினர் கிறிப்டோலோமஸ் என்ற பொறி வண்டை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றனர். வண்டு களை வயலில் விட்டு, சாப்பிட வைத்து கட்டுப்படுத்த முடியும் என்று

நம்பிக்கை தருகின்றனர்.  இப்பெண்களுக்கு தொழில் நுட்பங்கள் மற்றும் சந்தேகங் களை விளக்கவும், விற்பனைக்கு வழிகாட்டவும் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் செயல்படுகின் றனர். வண்டு தேவைப்படுவோர், விஞ்ஞானி செல்வமுகிலனை 94860 - 89911 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். இந்த வண்டுகளை ஏக்கருக்கு 125 என்ற அளவில் விட வேண்டும்; சிறிய வண்டு களாக இருந்தால் 250 வண்டுகள் விட வேண்டும், என்றனர்

**பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதிப்பு: மத்திய அரசு முடிவுக்கு 'சைமா' வரவேற்பு**

திருப்பூர்: பனியன் தொழிலுக்கு பாதிப்பை ஏற்படுத்தி வந்த, பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ள மத்திய அரசின் முடிவுக்கு 'சைமா' சங்கம் வரவேற்பு தெரிவித்துள்ளது. ஜவுளித்தொழிலின் மூலப்பொருளான பருத்தி விளைச்சல் இந்தியாவில் அதிகமாக இருந்தது. உலக அளவிலும் அதிக பருத்தி விளைந்ததால், பஞ்சு ஏற்றுமதிக்கு அரசு சலுகை அளித்து ஊக்குவித்தது. ஆதரவு விலையை காட்டிலும் கூடுதலாக கிடைத்ததால், வியாபாரிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் அதிக கவனம் செலுத்தினர். அளவுக்கு அதிகமாக ஏற்றுமதியானதால், உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்ய முடியவில்லை. பஞ்சு தட்டுப்பாடு ஏற்பட்டு நூல் உற்பத்தி குறைந்தது; நூல் விலை, விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்து விட்டது.

ஆரம்ப காலத்தில் இருந்தே பருத்தி ஏற்றுமதிக்கு தடைவிதிக்க வேண்டும் என்று, திருப்பூர் 'சைமா' சங்கம் குரல் கொடுத்து வந்தது. கடந்த வாரத்தில், பருத்தி ஏற்றுமதியை கட்டுப்படுத்தும் வகையில், ஏற்றுமதிக்கு 3 சதவீதம் வரி (ஒரு டன் பஞ்சுக்கு 2,500 ரூபாய்) விதிக்கப்பட்டது. இருப்பினும், பருத்தி ஏற்றுமதி கட்டுக்குள் வரவில்லை. இதனால், மத்திய அரசு நேற்று முதல் பருத்தி ஏற்றுமதிக்கு தடைவிதித்துள்ளது. இது குறித்து திருப்பூர் 'சைமா' தலைவர் ஈஸ்வரன் கூறியதாவது: கடந்த ஆண்டு ஜூன் மாதம் திருப்பூரில் நடந்த விழாவில், ஜவுளித்துறை அமைச்சக அதிகாரிகள் கலந்துகொண்டனர். பருத்தி ஏற்றுமதி உச்சத்தில் இருந்த அக்காலகட்டத்திலேயே, 'மூலப்பொருள் ஏற்றுமதிக்கு தடைவிதிக்க வேண்டும்' என, சைமா சங்கம் குரல் கொடுத்தது. அது குறித்து அமைச்சகத்திற்கு மனுவும் அனுப்பி வைக்கப்பட்டது. அளவுக்கு அதிகமான பருத்தி ஏற்றுமதியால், திருப்பூர் பனியன் தொழிலுக்கு ஏற்படும் பாதிப்புகளை உணர்ந்து, அப்போதே கோரிக்கை வைக்கப்பட்டது. இருப்பினும், உடனடி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால், கடந்த ஆண்டு இறுதியில் கூட, தட்டுப்பாடு ஏற்பட்டு பஞ்சை இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆரம்பத்தில் இருந்தே பருத்தி ஏற்றுமதிக்கு தடைவிதிக்க வேண்டும் என்ற சைமா சங்கத்தின் கோரிக்கையை ஏற்று, மத்திய அரசு இன்று (நேற்று) தடைவிதித்துள்ளது வரவேற்கத்தக்கது. பஞ்சு ஏற்றுமதிக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டிருப்பதால், நூல் ஏற்றுமதியும் கட்டுக்குள் வந்து, நூல் விலை குறையும் என எதிர்பார்க்கிறோம். இவ்வாறு, ஈஸ்வரன் தெரிவித்தார்.

**விவசாயிகள் குறை தீர் கூட்டம்**

உடுமலை: உடுமலை வருவாய் கோட்ட அளவிலான விவசாயிகள் குறை தீர் கூட்டம் ஏப்., 23ம் தேதி காலை 11.00 மணிக்கு, உடுமலை தாலுகா அலுவலகத்தில் நடக்கிறது. விவசாயிகள் பங்கேற்று பயன்பெறுமாறும், அதிகாரிகள், கடந்த கூட்டங்களில் விவாதிக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான பதில்களை மனுதாரர்களுக்கு அளிக்க வேண்டும் என ஆர்.டி.ஓ., சோமசேகரன் தெரிவித்துள்ளார்.

**அறுவடை சீசனில் நிலக்கடலை விலை வீழ்ச்சி: இருப்பு வைக்க இடம் இல்லாததால் அவதி**

உடுமலை,: அறுவடை சீசனில் நிலக்கடலை விலை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், இருப்பு வைக்க போதிய வசதி இல்லாமல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

உடுமலை அருகேயுள்ள தேவனூர்புதூர், ஆண்டியூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் பி.ஏ.பி., கிணற்றுபாசனம் மற்றும் மானாவாரியாக பல ஆயிரம் ஏக்கரில் நிலக்கடலை பயிரிடப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் நிலக்கடலை அதிகளவு எண்ணெய் மற்றும் திண்பண்டங் கள் தயாரிப்பிற்காக பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பப் படுகிறது. சாகுபடியில் ஏக்கருக்கு 40 கிலோ கொண்ட 25 மூட்டைகள் வரை சராசரி விளைச்சல் கிடைத்து வந்தது. இந்த சீசனில் மழை குறைவு மற்றும் பி.ஏ.பி., பாசனத்தில் போதிய தண்ணீர் கிடைக்காத காரணத்தால் விளைச் சல் பல மடங்கு குறைந்துள்ளது. அறுவடை பணிகளுக்காக பி.ஏ.பி., தண்ணீர் திறப்பை விவசாயிகள் எதிர்பார்த்திருந்தனர். நேற்று முன்தினம் திருமூர்த்தி அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டதையடுத்து ஆண்டியூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் நிலக்கடலை அறுவடை தீவிரமடைந்துள்ளது. தற்போது ஒரு கிலோ நிலக்கடலையின் விலை 27 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகிறது. அறுவடை சீசன் துவங்கியதும் விலை சரிவு ஏற்பட்டுள்ளதால் ஏக்கருக்கு பல ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்படும் நிலை உள்ளது.

**ஆண்டியூர் பகுதி விவசாயிகள் கூறியதாவது**: பி.ஏ.பி., பாசனத்தில் வளர்ச்சி தருணத்தின் போது தேவையான தண்ணீர் கிடைக்கவில்லை. செடிகளில் தேவையான காய்ப்பு பிடிக்கவில்லை. ஏக்கருக்கு 20 மூட்டைக்கும் கீழ் விளைச்சல் குறைந்துள்ளது. களையெடுப்பு மற்றும் அறுவடை பணிகளுக்கு அழைக்கப்படும் தொழிலாளர்களின் கூலி 110 ரூபாயாக உயர்ந்துள்ளது. உரம் போன்ற இடுபொருட்களின் விலையும் பல மடங்கு அதிகரித்துள்ளதால் கிலோவிற்கு 35 ரூபாய் விலை கிடைத்தால் மட்டுமே கட்டுபடியாகும். அறுவடை சீசன் துவங்கியதும், வெளிநாடுகளிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது போன்ற பல காரணங்களை கூறி வியாபாரிகள் செயற்கையாக விலை வீழ்ச்சியை ஏற்படுத்துகின்றனர். நிலையான விலை கிடைக்கும் வரை இருப்பு வைக்க முடிவெடுத்தாலும் அதற்கான வசதிகள் இப்பகுதியில் இல்லை. 25 கி.மீ., தள்ளியுள்ள உடுமலையில் இயங்கி வரும் ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு நிலக்கடலையை எடுத்து செல்வதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. இப்பகுதி விவசாயிகளின் வசதிக்காக கிடங்கு மற்றும் கள வசதி ஏற்படுத்த வேண்டும் என பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருகிறோம். ஆனால், அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காததால் பல விவசாயிகள் நிலக்கடலை சாகுபடியை கைவிட்டு மாற்றுப்பயிருக்கு தாவி வருகின்றனர்', இவ்வாறு தெரிவித்தனர்.

**உடுமலையில் தேங்காய் உரித் தொழிலாளர் 'ஸ்டிரைக்': கூலி உயர்வு கேட்டு போராட்டம்**

உடுமலை: கூலி உயர்த்தக் கோரி உடுமலையில் தேங் காய் உரித் தொழிலாளர் கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உடுமலை பகுதியில் தேங்காய் உரிக்கும் பணியில் பெரியவாளவாடி, சின்னவாளவாடி, பழையூர், ஜே.ஜே., நகர் உள்ளிட்ட கிராமங்களில், 100க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உள்ளனர். தங்களுக்கு தேங்காய் உரிக்கும் கூலியை உயர்த்தி தரக்கோரி 15 நாட்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில், நேற்று ஒருங்கிணைப்பாளர் முருகேசன் தலைமையில் ஆர்ப்பாட்டம் செய்தனர். தொழிலாளர்கள் கூறியதாவது: பெரியவாளவாடி மற்றும் சுற்றுப்பகுதியில், ஒரு காய்க்கு 19 பைசா வீதம் ஆயிரம் காய்களுக்கு 190 ரூபாய் மட்டுமே கூலியாக நிர்ணயிக்கப் பட்டு, பலஆண்டுகளாக வழங்கப்படுகிறது. தற்போதுள்ள விலைவாசிக்கு இக்கூலியை வைத்து குடும்பம் நடத்த முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, ஆயிரம் காய் உரிக்க 250 ரூபாய் கூலி வழங்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறோம். வியாபாரிகளிடம் நடந்த பேச்சுவார்த்தையில் 200 ரூபாய் மட்டுமே தர முடியும் என்கின்றனர். எனவே, நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தத் தில் ஈடுபட்டுள்ளோம். இதற்கு, தேவனூர்புதூர், கரட்டு மடம், சாளையூர், கொடுங்கியம், குண்டலப்பட்டி, லட்சுமாபுரம், கூலநாயக்கன்பட்டி, தளி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களிலுள்ள தேங்காய் உரித்தொழிலாளர்களும் ஆதரவு அளிக்க வேண்டும். இவ்வாறு, தேங்காய் உரித் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

---

**விவசாயிகள் மகிழ்ச்சி**

பொங்கலூர்: பி.ஏ.பி., தண்ணீர் கடைமடை பகுதிக்கு வந்து சேர்ந்ததால், விவசாயி கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பி.ஏ.பி., முதல் மண்டல பாசனத் துக்கு ஜன., 22ல் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன் மூலம் பொங் கலூர் பகுதியில் 80 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றன. கடந்த பிப்., 19ல் காண்டூர் கால்வாயில் உடைப்பு ஏற்பட்டது. இதனால், மூன்றாம் சுற்றுக்கு தண்ணீர் வருவதில் சிக்கல் ஏற்பட்டது. காண்டூர் கால்வாய் சீர் செய்யப் பட்டதால், நான்காம் சுற்றுக்கு கடந்த 18ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. நேற்று முன்தினம் நள்ளிரவு 12.00 மணிக்கு கடைமடை பகுதிக்கு தண் ணீர் வந்து சேர்ந்தது. கடுமையான வெயில் காரணமாக பயிர்கள் வாடிய தால் விவசாயிகள் கவலையில் இருந்தனர். தற்போது தண்ணீர் வந்துள்ளதை அடுத்து, இரவு, பகல் பாராமல் பயிர் களுக்கு மும்முரமாக நீர் பாய்ச்சுவதில் ஈடுபட்டுள்ளனர். பெரும்பாலான விவசாயிகள், தென்னை பயிரிட்டுள்ள தால், கோடை காலத்தில் தென்னை செழிப்பாக வளர்ந்து, நன்றாக காய் பிடிக்கும் என்பதால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**கோழிகளை காப்பாற்ற நூதன முயற்சி**

பல்லடம் : கடும் வெயிலில் இருந்து கோழிகளை காப்பாற்றவும், இறப்பு விகிதத்தை குறைக்கவும் கோழிப்பண்ணை 'ஷெட்' மேல் பகுதியில் தென்னை ஓலைகளை, கறிக்கோழி பண்ணையாளர்கள் அமைத்து வருகின்றனர்.

பல்லடம் பகுதியில் 4,000க்கும் மேற்பட்ட கறிக்கோழி உற்பத்தி பண்ணைகள் உள்ளன. இப்பண்ணைகள் பெருமளவு ஓடுகள், 'சிமெண்ட்' சீட்டுகள் கொண்டு அமைக்கப்பட்டுள்ள ஷெட்டுகளாக உள்ளன. ஓடுகள், சிமெண்ட் சீட் ஷெட்டுக்கள், வெயில் காலத்தில் கடும் வெப்பத்தை கொடுக்கின்றன. மழை காலத்தில் மட்டுமே இவை கோழிகளுக்கு மிதமான கதகதப்பை தருகின்றன. பல்லடம் பகுதியில் கடந்த இரண்டு வாரங்களாக அடித்து வரும் கடும் வெயிலால் பண்ணைகளில் உள்ள குஞ்சுகள், கோழிகள் தாக்குப்பிடிக்க முடியாமல் சுருள்கின்றன. இதன் காரணமாக, பண்ணைகளில் கோழிகள் இறப்பு விகிதம் நான்கு சதவீதமாக அதிகரித்துள்ளது. கோழிகளை காப்பாற்றவும், இறப்பு விகிதத்தை குறைக்கும் வகையிலும் குளிர்ச்சியைத்தரும் தென்னை ஓலைகளை, கோழிப்பண்ணை ஷெட்களின் மேற்பரப்பில் அமைக்கும் பணியில் பண்ணையாளர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

**சின்ன சின்ன செய்திகள்**
ஏப்ரல் 20,2010,16:49 IST

---

**தென்னை வளர்ச்சி வாரிய திட்டம்:** மதுரை மாவட்டத்தில் 2009-2010ம் ஆண்டில் வேளாண்மைத்துறை மூலம் மத்திய, மாநில நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் மானியத் திட்டம்
செயல்விளக்க திடல் அமைக்க மானியம்: ரூ.17,500/ எக்டர்
விதைக்கிராம திட்டம்: நெல், தானியங்கள், பயறு விதைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் - 50 சத மானியம்.
**விதை சேமிக்கும் கலன்**:
1. (அ) 20 குவின்டால் கொள்ளளவு - 33% (அ) ரூ.3000 (ஆதி)
(ஆ) 10 குவின்டால் கொள்ளளவு - 33% (அ) ரூ.1500 (ஆதி)
2. அ) 20 குவின்டால் கொள்ளளவுக்கு 33% (அ) ரூ.15,000 (இதர), (ஆ) 10 குவின்டால் கொள்ளளவுக்கு 25% (அ) ரூ.1000 (இதர)
3. விவசாயிகள் பயிற்சி - ரூ.15,000/பயிற்சி.
**பயனாளிகளின் தகுதி**: நெல், பயறு வகை தானியங்கள், எண்ணெய் வித்துக்கள் சாகுபடி செய்யும் சிறு / குறு / இதர விவசாயிகள்.

**நித்திய கல்யாணி மூலிகை விவசாயி**

ஏப்ரல் 20,2010,16:48



நித்திய கல்யாணி என்பது ஒரு வகையான மூலிகை பயிராகும். இதை ஆதிகாலம் முதல் இன்றுவரை, இயற்கை வன மூலிகையை பயன்படுத்தி வைத்தியம் செய்யும் வைத்தியர்களின் பயன்பாட்டில் இந்த நித்தியகல்யாணி அதிகப் படியான நோய்களுக்கு அடிப்படை மூலக்கூறாகவே இதன் இலை மற்றும் விதை, வேர்களை பயன்படுத்தி வருகின்றனர். தற்போதுள்ள தண்ணீர் தட்டுப்பாட்டின் காரணமாக நாம் ஒரு மாற்றுப்பயிர் திட்டத்தினை உருவாக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இந்த திட்டத்தில் மூலிகை பயிரான நித்திய கல்யாணி மிகவும் முக்கியமானதாகவே உள்ளது.

**வகைகள்:** இளம் சிவப்பு நிறம், வெள்ளை நிறம் என உள்ளது. இதில் இளம் சிவப்பு நிறமுடைய செடிகள் அதிக அளவு வேதியியல் மூலப் பொருட்கள் அடங்கியுள்ளன என மத்திய மூலிகை மற்றும் வாசனை திரவிய பொருட்களுக்கான பிரிவின் மூலம் இவ்வகை பயிர்களை வணிக ரீதியாக சாகுபடி செய்ய பரிந்துரை வழங்கப்படுகிறது.

**மானியம்:** தமிழ்நாடு மூலிகை மற்றும் வாசனை திரவிய பொருட்களுக்கான பிரிவிலிருந்து ஒரு எக்டர் அளவுக்கு என ரூ.11,250-ஐ மானியமாக வழங்குகிறார்கள்.

**மூலக்கூறுகள்:** வின்கிரிஸ்டின், வின்பிளாஸ்டின்.

**பயன்பாடு தேவையான நோய்கள்:** நீரிழிவு நோய், மலேரியா நோய், ரத்தம் சுத்திகரித்தல், ரத்த அழுத்தம் குறைத்தல், ரத்த புற்றுநோய்.

இயற்கை முறை விவசாயம் செய்வோம். வளமான எதிர்காலத்தை உருவாக்குவோம்.

**செய்முறை:** நித்திய கல்யாணியை பயிர் செய்யும் நிலத்தை இயற்கை உரம் குறைந்தது 10 டன் அளவு கொண்டு 4 முறை உழவு செய்ய வேண்டும். ஒரு அடி அகலத்தில் பார்கள் அமைத்து 1+1 என நடவு செய்ய வேண்டும். 45 நாட்களுக்குள் களை எடுக்க வேண்டும். முதல் அறுவடை 80-90வது நாளில் செய்ய வேண்டும். பிறகு ஒவ்வொரு 40 நாட்களுக்கு ஒருமுறை என மொத்தம் வருடத்தில் 7 முறை இலை உருவ வேண்டும். 8வது முறை நித்திய கல்யாணி செடியை வேருடன் பிடுங்கி வேர், இலை, விதை என தனியாக பிரித்து விற்பனை செய்ய வேண்டும்.

ஒரு அறுவடைக்கு குறைந்தது அரை டன் இலைகளை எடுக்க திட்டம் கொள்ள வேண்டும். மேலும் ஒவ்வொரு செயலுக்கு நலன் விவசாய மேம்பாட்டுப் பிரிவின் ஆலோசனையை பெற வேண்டும். நல்ல தரமான பதப்படுத்தப்பட்ட விதைகளை குறைந்த விலைக்கு கொடுத்து உயர்ந்த சந்தை விலைக்கு பெற்றுக்கொள்ள உத்தரவாதம் வழங்குகிறோம். நித்திய கல்யாணியை மேட்டு நிலங்களில் விதைப்பு முறையிலும், தண்ணீர் வசதி உள்ள நிலங்களில் நாற்று விட்டு எடுத்து நடவு செய்யும் முறையிலும் செய்யலாம். நலன் விவசாய மேம்பாட்டு நிறுவனம் நித்திய கல்யாணியை பயிர்

செய்யும் ஒவ்வொரு விவசாயியின் மீதும் தனி கவனம் கொண்டு ஆரம்பம் முதல் முடிவு வரை சிறந்த விவசாய வல்லுனர்களின் குழுக்களைக் கொண்டு நல்ல லாபகரமான விவசாயம் செய்ய உத்தரவாதம் கொடுக்கிறோம்.

**தொடர்புக்கு:**

சி.ஆன்ரூஸ், ஆம்பூர், 98941 59151.

கே.சத்யபிரபா, 67, சர்வலட்சுமி இல்லம்,செல்லம் குடியிருப்பு, உடுமலை-642 124.

**நவீன தொழில்நுட்பம்**

ஏப்ரல் 20,2010,16:46 IST



**கோடையில் ஏலக்காய் செடியை பாதிக்கும் பூச்சிகள்:** சிவப்பு சிலந்திபூச்சி: இலைகளின் அடிப் பக்கம் நூலாம்படை காணப்படும். பாதிக்கப் பட்ட இலைகள் மஞ்சள் மற்றும் வெளிறிய வெள்ளை நிறத்தில் காணப்படும்.

**மாவுப்பூச்சிகள்:** ஏலச்செடி தண்டின் அடிப்பகுதிகளில் இலைச் சோகைகளின் இடுக்கில் மற்றும் சரும காய்களின் (சுண்ணாம்பு தெளித்து காய்ந்தது போல) பூச்சிகள் ஒட்டிக்கொண்டு சாற்றை உறிஞ்சுவதால் தண்டுகளும் மஞ்சள் நிறமாகும்.

**சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறைகள்:** சிவப்பு சிலந்தி பூச்சிகளின் தாக்கம் இருந்தால் நனையும் கந்தகம் 250 கிராம் 100 லிட்டர் நீரில் கரைத்து இலையின் அடிப்பக்கம் நனையுமாறு தெளிக்க வேண்டும்.

* மாவுப்பூச்சிகளின் தாக்கம் இருந்தால் மானோகுரோட்டோபாஸ், சிந்தெடிக் பைரித்ராய்ட் ஆகிய பூச்சி நாசினிகளை அடிக்கடி தெளிப்பதை தவிர்க்க வேண்டும். ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம் கடைபிடிக்க வேண்டும்.

* ஏலத்தோட்டத்தில் 50 சத நிழல் உண்டாக்க ஜூன் - ஜூலையில் மரக்கன்றுகளை நடவேண்டும். அதிக நிழல் இருந்தால் மே மாதத்தில் கீழ்கொப்புகளை அகற்ற வேண்டும்.

உழவடை முறை நிர்வாகம்: ஜனவரி மற்றும் செப்டம்பர் மாதங்களில் காய்ந்த தொங்கு சோகை, சரங்கள் மேல் உள்ள காய்ந்த சருகுகளை நீக்க வேண்டும்.

* மே மாத கடைசியில் (அடைமழைக்கு முன்பு) துத்தம் + சுண்ணாம்பு போர்டோ கலவை தெளிக்கும் முன் பழைய சரங்கள், காய்ந்த தட்டைகளை நீக்க வேண்டும்.

மேற்கூறிய நடவடிக்கையால் ரசாயன பூச்சி நாசினிகளின் சரங்கள் மற்றும் இளம் சிம்புகளில் தெளிக்க தோதாக இருக்கும்.

**வலைப்பயிர்:** தண்டு துளைப்பான் புழுக்கள் ஏலத்தைக் காட்டிலும் ஆமணக்கு பூ கொத்துகளை விரும்பி அதிக சேதம் உண்டாக்கும். நிழல் குறைவான அல்லது ஏலத்தோட்டத்து எல்லையில் ஆமணக்கு பயிர் செய்தால் கூடுதல் நிழல் கிடைப்பதோடு தண்டு துளைப்பான் புழுக்கள் ஆமணக்கு பூங்கொத்தில் சிக்கி அழிக்கப்பட ஏதுவாகும். டிசம்பர் முதல் பிப்ரவரி வரை புழுக்கள் பாதித்த ஆமணக்கு பூங்கொத்துகளை அகற்றி களைவதன் மூலம் ஏலத்தோட்டங்களில் தண்டு துளைப்பானின் ஆதிக்கத்தை பெரிதும் குறைக்கலாம்.

**உயிரியல் முறை**: பூச்சி நாசினி தெளித்த பின்னரும் இளம் தட்டைகளில் தண்டு துளைப்பான் புழுக்கள் அதிகம் இருந்தால் பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ் உயிர் அணுக்களின் கரைசல் 5-10 மில்லி சிரிஞ்ச் மூலம் தண்டு துளைப்பான் துவாரம் வழியே செலுத்தினால் தண்டின் உள்ளே உள்ள புழுக்கள் கட்டுப்படுத்தப்படும். **(தகவல்: எஸ்.வரதராஜன், ஐசிஆர்ஐ, மயிலாடும்பாறை)**

**கோடையில் வெண்டை சாகுபடி**

ஏப்ரல் 20,2010,16:44 IST



**நவீன முறைகள்:** வெண்டை சாகுபடி செய்யும் விவசாயிகள் கண்டிப்பாக உயிர்வேலி போடவேண்டும் என்கிறார் பிரபல விவசாயி ஆர்.பாண்டியன் (94432 43075). உயிர்வேலி போட உதவக்கூடியது மக்காச்சோளம், துலுக்க சாமந்தி மற்றும் அகத்திக்கீரையாகும். தற்போது விவசாயிகள் போடவேண்டியது ஹைபிரிட் மக்காச்சோளமாகும். இதன் விதையை வெண்டைச்செடி வயலைச் சுற்றி நடவேண்டும். மக்காச்சோளத்தை ஏற்ற இடைவெளியில் நடவேண்டும். நெருக்கமாக நடக்கூடாது. இதனை நட்டுவிட்டு செடி வளரும்போது சிறிதளவு யூரியா உரம் கொடுத்து வாரத்திற்கு ஒரு முறை பாசனம் செய்ய வேண்டும். இதனால் மக்காச்சோளத்தின் அடித்தண்டு பருத்தி செடி உயரமாக வரும். செடிக்கு செடி இடைவெளியில் நல்ல காற்றோட்டம் இருக்கும். இதே மாதிரி காற்றோட்டம் ஏற்பட வெண்டை விதையை நடும்போது விதைக்கு விதை ஒண்ணே கால் அடி இடைவெளி இருக்க வேண்டும். இவ்வாறு விதை நடும்போது செடிக்கு செடி இடைவெளியில் நல்ல காற்றோட்டம் ஏற்படும். செடி தளதளவென்றும் உயரமாகவும் வளரும். செடியில் கணுக்கு கணு இடைவெளி அதிகமாகும். செடி செழிப்பாக ஐந்து அடி உயரம் வளரும். இந்த மாதிரியான வாளிப்பான செடியை வெள்ளைநரம்பு வியாதி தாக்காது. மக்காச்சோள வேலியும் வெண்டைப் பயிரினை வியாதி வராமல் தடுக்கும். விவசாயிகள் செடிகளுக்கு உரம் போடும்போது தழைச்சத்து உரத்தை குறைவாக இடவேண்டும். ஆனால் இயற்கை உரத்தோடு சூப்பர் பாஸ்பேட் உரம் கலந்து இடுவது மிக முக்கியமானது. செடி நட்டு 15-20 நாட்கள் ஆன பிறகு ஜிங்க் சல்பேட் உரம் ஏக்கருக்கு 10 கிலோ இடலாம். இதனால் வெள்ளை நரம்பு நோயின் தாக்குதலை தவிர்க்கலாம். இம்மாதிரியாக சாகுபடி செய்த வயலில் சூரிய வெளிச்சம் செடிகள் வளர்ச்சிக்கு சாதகமாக இருக்கும். வெண்டை வயலில் களையெடுக்கும் சமயம் எம்.என்.மிக்சர் 5 கிலோவை மணலுடன் கலந்து நிலத்தில் இடவேண்டும்.

**உயிர்வேலி அமைப்பது எப்போது:** வெண்டை சாகுபடிக்கு பூமியை தயாரிக்கும் சமயத்தில் மக்காச்சோளம்

போன்றவைகளை நட ஏற்பாடு செய்துவிட்டு பிறகு வெண்டையை நடுவதற்கு ஏற்றபடி நிலத்தினை தயார் செய்து கொள்ளலாம்.

**பாசனம்:** பாசனத்தை கவனித்து செய்யலாம். இயற்கை உரம் போட்டதால் பாசனம் குறைவு. இதனை கவனித்து செய்தால் வயலில் தண்ணீர் தேங்காமல் இருந்து செடிகள் செழிப்பாக வளரும்.

**அறுவடை**: நிலத்தில் விதை விதைத்த 35ம் நாள், முதல் அறுவடை கிடைக்கும். பின்னால் விவசாயி காட்டும் கவனத்தைப் பொறுத்து மொத்தம் 25 அறுவடைகள் கிடைக்கும். கடுமையான உழைப்பில் ஏக்கரில் 10,000 கிலோ மகசூல் கிடைக்கும். கிலோ விலை ரூ.5 என்று வைத்துக்கொண் டாலும் ரூ.50,000 வருமானம் கிட்டும். சாகுபடி செலவு ரூ.5,000 - 7,000 வரை இருக்கும். செலவு ரூ.10,000 என்று வைத்துக் கொண்டாலும் ஏக்கரில் நிகர லாபமாக ரூ.40,000 கிடைக்கும். வெண்டை செடியில் அறுவடை செய்யும்போது ஆட்கள் கையில் கையுறை போட்டுக்கொண்டு அறுவடை செய்வது நல்லது. அறுவடைப்பணி விரைவாக முடியும்.

**என்ன ரகம் போடலாம்:** விவசாயிகள் ஒட்டு வீரிய ரகங்களையும் (ஸ்பிக் 308, மைக்கோ ரகங்கள் 10, 11, 12) போடலாம் அல்லது சாதாரண ரகங்களையும் போடலாம். தற்போது நாட்டு ரகங்களை பெரிய மார்க்கெட்டுகளில் அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். வெண்டை குறுகிய காலத்தில் பணம் தரும் பயிர் ஆவதால் விவசாயிகள் உடனே சாகுபடி செய்யலாம்.

**எச்சரிக்கை:** ஒரு பகுதியில் வெள்ளை நரம்பு நோய் ஏற்கனவே இருப்பின் அப்பகுதியில் வெண்டை சாகுபடி செய்யக்கூடாது.

**-எஸ்.எஸ்.நாகராஜன்.**

தினத் தந்தி

***பயிரிடும் பரப்பளவு அதிகரித்து வருவதால் நாட்டின் பருத்தி உற்பத்தி 2.50 கோடி பொதிகளாக உயரும்***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நடப்பு 2010–11–ஆம் பருத்தி பருவத்தில் நாட்டின் பருத்தி உற்பத்தி 2.50 கோடி பொதிகளாக அதிகரிக்கும் என அமெரிக்க வேளாண் துறை மதிப்பீடு செய்துள்ளது.*

*பருத்தி பருவம் என்பது அக்டோபர் முதல் செப்டம்பர் வரை கணக்கிடப்படுகிறது. நடப்பு பருத்தி பருவத்தில் நாட்டின் பல மாநிலங்களில் பருவநிலை சாதகமாக இருக்கும்நிலையில் மேற்கண்ட உற்பத்தி எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*சென்ற 2009–10–ஆம் பருவத்தில் 2.35 கோடி பொதிகள் (ஒரு பொதி என்பது 170 கிலோ)*

பருத்தி உற்பத்தியானது.
மேலும் நடப்பு பருவத்தில் அதிக அளவில் பருத்தி சாகுபடி செய்யப்படும் மாநிலங்களில் பருத்தி விளைச்சலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் குஜராத் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் சில விவசாயிகள் இதர மாற்று பயிர்கள் சாகுபடியில் கவனம் செலுத்துவர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பருத்தி சாகுபடி

நடப்பு பருவத்தில் 1.03 கோடி ஹெக்டேரில் பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்படும் என்றும், இது, சென்ற பருவத்தில் 1.026 ஹெக்டேராக இருந்தது என்றும் இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

நடப்பு பருவத்தில் ஒரு ஹெக்டேருக்கு 528 கிலோ பருத்தி உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, சென்ற பருவத்தை விட 6 சதவீதம் அதிகமாகும்.

பீ.டி காட்டன் வகை பருத்தி உற்பத்தியும் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விவசாயிகள் மத்தியில் பருத்தி சாகுபடி குறித்து நல்ல அளவில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. சிறந்த தொழில்நுட்பம், நீர் மேலாண்மை, குறித்த காலத்தில் தேவையான உரம் மற்றும் ஊட்டச்சத்துக்களை அளிக்கும் நிலையில் இந்தியாவின் பருத்தி உற்பத்தி நல்ல அளவில் அதிகரிக்க வாய்ப்புள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது.

## நூல் விலை, பஞ்சு விலையை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்கும் சட்டசபையில் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் உறுதி

சென்னை, ஏப்.21–

“நூல்விலை, பஞ்சு விலையை குறைக்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்” என்று சட்டசபையில் சாத்தூர் ராமச்சந்திரன் உறுதி அளித்தார்.

நூல்விலை உயர்வு

தமிழக சட்டசபையில் கேள்வி நேரம் முடிந்ததும் நூல் விலையை குறைக்கவேண்டும் என்பது குறித்து அதி.மு.க., காங்கிரஸ், பா.ம.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, ம.தி.மு.க. முதலிய கட்சிகள் கொடுத்த கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

அந்த தீர்மானத்தின் மீது உறுப்பினர்கள் பேசிய விவரம் வருமாறு:–

செ.மா.வேலுச்சாமி (அ.தி.மு.க.):– நூல் விலை, பஞ்சுவிலை ஏற்றம் காரணமாக தமிழ்நாட்டில் நெசவுத்தொழில் நலிவடைந்துவிட்டது. ஈரோடு, பள்ளிப்பாளையம் உள்பட தமிழ்நாட்டில் பல பகுதிகளில் நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். நெசவு தொழில்கள் மூடும் நிலையில்

உள்ளன. நூல் விலை 30 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. இந்தியாவில் இருந்து பஞ்சு, நூல் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தியாவிற்கு போதிய அளவிற்கு போகதான் ஏற்றுமதி செய்யப்படவேண்டும்.

மின்கட்டண சலுகை

மின்சார வெட்டும் விசைத்தறி உள்ளிட்ட நெசவுத்தொழிலை பாதித்துள்ளது.

விசைத்தறிகளுக்கும், பின்னலாடை உள்ளிட்ட பல நெசவுத்தொழிலுக்கு இலவச மின்சாரமும், டீசலுக்கு மானியமும் மத்திய, மாநில அரசின் வரிவிலக்கும் வழங்கவேண்டும்.

ஞானசேகரன் (காங்கிரஸ்):– நூல் விலை உயர்ந்துள்ளதாலும், போதிய அளவில் கிடைக்காததாலும் வேலூர், குடியாத்தம், பள்ளிப்பாளையம், குமாரப்பாளையம், திருச்செங்கோடு, சங்கரன்கோவில், ஈரோடு, கோவை உள்பட தமிழ்நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் நெசவுத்தொழில் முடங்கி கிடக்கிறது. உண்ணாவிரதம் உள்ளிட்ட போராட்டங்களை அவர்கள் நடத்தி வருகிறார்கள். கிராமங்களில் பல மணிநேரம் மின்சாரத்தடை உள்ளது. இதனால் தொழில் பாதிக்கப்பட்டு நெசவாளர்கள் பட்டினி, பசியால் வாடுகின்றனர்.

மானிய விலையில் நூல் கொள்முதல்

நூல் ஏற்றுமதியை குறைத்து தமிழகத்திற்கு போதிய அளவு நூல் குறைந்த விலையில் கிடைக்கச்செய்ய மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தவேண்டும்.

நூல்களை தமிழக அரசே கொள்முதல் செய்து மானிய விலையில் மக்களுக்கு வழங்கவேண்டும். இந்த பிரச்சினை குறித்து மத்திய அரசு, மாநில அரசு அதிகாரிகள், விசைத்தறி முதலாளிகள், நெசவாளர்கள் ஆகியோர் கொண்ட முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்.

ஓய்வூதியம்

ஜி.கே.மணி (பா.ம.க.):– தமிழ்நாட்டில் கடந்த 4 மாதங்களாக நெசவுத்தொழில் மிகவும் நலிவடைந்துள்ளது. பல பனியன் ஆலை தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. மொத்தத்தில் நெசவுத்தொழிலில் ஈடுபட்டுள்ள லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்து தவிக்கிறார்கள். பஞ்சும் கிடைக்கவில்லை. பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஆயிரம் மெகாவாட் மின்சாரம் கொடுக்கப்படுகிறது. ஆனால் தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கு தொழில் செய்ய 2 ஆயிரத்து 800 மெகாவாட்தான் கிடைக்கிறது. நெசவாளர்களுக்கு கொடுக்கப்படும் ஓய்வூதியத்தை ஆயிரமாக உயர்த்தவேண்டும்.

கோவிந்தசாமி (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு):– எதிர்பார்த்த அளவு பஞ்சு விளையவில்லை. இதனால் ஜவுளித்தொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆன்லைன் வர்த்தகத்தில் இருந்து பஞ்சு, நூல் ஆகியவை விடுவிக்கப்பட வேண்டும். கைத்தறி நெசவாளர்களுக்கு மானிய விலையில் நூல் கொடுக்கப்படவேண்டும். மானிய விலையில் டீசலும் கொடுக்கவேண்டும்.

டி.ராமசாமி (இந்திய கம்யூனிஸ்டு):– இந்தியாவில் பருத்தி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டில் பஞ்சு பற்றாக்குறை இருக்கும்போது வெளிநாட்டுக்கு பஞ்சு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பஞ்சாலைகளில் 40 சதவீத மின்வெட்டு உள்ளது. பஞ்சு ஏற்றுமதியை

தடைசெய்யவேண்டும்.

ஞானதாஸ் (ம.தி.மு.க.):– பருத்தி நூல் விலையின் ஏற்றத்தால் செயற்கை நூல்விலை அதிகரித்துள்ளது. சத்திரப்பட்டியில் மின்சார தட்டுப்பாட்டால் நெசவுத்தொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. நெசவாளர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு அர உரிய பாதுகாப்பு கொடுக்கவேண்டும்.

பஞ்சு, நூல் விலையை குறைக்க நடவடிக்கை

அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன்:– கடந்த 2 வருடங்களாக பஞ்சு, நூல் பிரச்சினை உள்ளது. பிரச்சினையை போக்க முதல்–அமைச்சர் கருணாநிதி தொடர்ந்து மத்திய அரசுக்கு வலியுறுத்தி வருகிறார். தமிழ்நாட்டுக்கு 95 லட்சம் பஞ்சு பேல் தேவை. ஆனால் தமிழ்நாட்டில் 5 லட்சம் பஞ்சு பேல் தான் விளைகிறது.

இந்திய பஞ்சு கழகம் மூலம் பஞ்சு கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த வருடம் பிரேசில், சீனா, பாகிஸ்தான் உள்பட பஞ்சு விளையும் உலக நாடுகளில் எல்லாம் குறைந்த அளவு பருத்தியே விளைந்துள்ளது. இதனால்தான் பஞ்சுவிலையும் நூல்விலையும் உயர்ந்து உள்ளது. இந்த இரு பொருட்களின் விலையையும் குறைக்க வேண்டும் என்பதே தமிழக அரசின் விருப்பம். நூல் ஏற்றுமதி அளவு குறைக்கப்பட்டுள்ளது.

பஞ்சு விலையையும் நூல்விலையையும் குறைக்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆன்லைன் வர்த்தகம்

பாலபாரதி (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு) ஆன்லைன் வர்த்தகத்தில்இருந்து பஞ்சு, நூல்ஆகியவற்றை விடுவிக்க மத்திய அரசுக்கு கடிதம் எழுத வேண்டும்.

அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன்:– முன்பை விட பஞ்சு விலை குறைக்கப்பட்டுள்ளது. ஆன்லைன் வர்த்தகத்தில் இருந்து பஞ்சு, நூல் ஆகியவற்றை விடுவிக்க மத்திய அரசை வலியுறுத்தப்படும்.

மேற்கண்டவாறு நூல் விலை உயர்வுகுறித்து சட்டசபையில் பேசப்பட்டது.

நூல் விலை உயர்வு குறித்து அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் அளித்த பதில் திருப்தி தரவில்லை என்று கூறி அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.